

இராணிப்பேட்டை மாவட்ட திமுக அலுவலகத்தின் முன்பு முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 22ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மௌன அஞ்சலி செலுத்தினார். இதில் ஏ.கே.சுந்தரமூர்த்தி, துரைமஸ்தான், குமுதாகுமார், ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஜெயந்தி திருமூர்த்தி, பி.பூங்காவனம், க.சுந்தரம், ஏ.வி.நந்தகுமார், சேஷாவெங்கட், டி.சி.பத்மநாபன், இமாயூன், பெரியசாமி, அப்துல்லா, எஸ்.வினோத், சக்திவேல் குமார், விஜியகுமார், ஜெயக்குமார், நகரமன்ற உறுப்பினர்கள் கழகத்தினர் உடனிருந்தனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (24.11.2025) திருப்பூர் மாவட்டம், முத்தூர் கனகதாரா திருமண மண்டபத்தில் வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார்கள். உடன் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் திருஃபெலிக்ஸ் ராஜா ஆகியோர் உள்ளனர்.

### மீனவர் நலன் காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

# ரூ.567 கோடியில் குமரி மாவட்ட மீனவர்களுக்கு மாபெரும் திட்டங்கள்!

## மீனவ மக்கள் பெரு மகிழ்ச்சி! கழக மீனவர் அணிச் செயலாளர் - மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

**நாகர்கோவில், நவ.25-**

**'மீனவர் நலன் காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் குமரி மாவட்ட மீனவ மக்களுக்கு ரூ.567 கோடியில் மாபெரும் திட்டங்களை அறிவித்துள்ளதற்கு மீனவ மக்கள் பெருமகிழ்ச்சியடைந்து நன்றி தெரிவித்துள்ளனர்' என கழக மீனவர் அணி செயலாளரும் மீனவர் நல வாரியத் தலைவருமான அ.ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கடந்த 2021 ஆம் ஆண்டு, கழக அரசு பொறுப்பேற்றது முதல் குமரி மாவட்ட கடற்கரை கிராமங்களுக்கு 567 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடற்கரை கிராமங்களை கடலரிப்பு உள்ளிட்ட அபாயங்களில் இருந்து பாதுகாக்கும் வகையிலான உட்கட்டமைப்பு திட்டங்கள், தனிநபர் பயன்பாட்டுத் திட்டங்கள் என கழக அரசு இரண்டிலுமே தனிக்கவனம் செலுத்தியதால், குமரிமீனவர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

குமரி கடற்கரை கிராம மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வரும், கடலரிப்பினையும், கடல் சீற்றத்தையும் , கட்டுப்படுத்தும் நோக்கத்தில் கழக அரசு ஏராளமான திட்டங்களைத் தந்துள்ளது.

**2021-2022 நிதியாண்டு**

தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுறைமுகத்திற்கு கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 60 கோடி ரூபாய் ஒதுக்கியது கழக அரசு! 2021-2022 ஆம் நிதியாண்டில் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து முடிந்துள்ளது.

வாணியக்குடி மீனவ கிராமத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கவும், குளச்சலில் மீன்பிடித் துறை முகத்தினை விரிவாக்கம் செய்யவும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள உத்தர விடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆய்வுப் பணிகளுக்காக மட்டுமே கழக அரசு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, 2021_22 ஆம் நிதியாண்டில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேபோல் குறும்பனை மீனவ கிராமத்தில், மீன் இறங்குதளம் அமைக்க 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அதே 2021-22 ஆம் நிதியாண்டிலேயே சைமன் காலனி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

கேசவன்புத்தன்துறை மீனவ கிராமத்தில் கடலரிப்பு பெரும் பிரச்னையாக இருப்பதை அறிந்து, நம் திராவிட மாடல் அரசானது 2021-22 ஆம் நிதியாண்டில் கேசவன் புத்தன்துறையில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்ட 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, பணிகள் முடிந்துள்ளது.

இதே நிதியாண்டில் புத்தன் துறைக்கு 22 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டது. இதேபோல் மேலமணக்குடி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க 2021-22 ஆம் நிதியாண்டில் 29 கோடியே 50 லட்சம் ரூபாயும், கீழ மணக்குடி மீனவ கிராமத்திற்கு மீன் இறங்குதளம் அமைக்க 29 கோடியே 50 லட்சம் ரூபாயும் கடந்த 2021-22 ஆம் நிதியாண்டி லேயே ஒதுக்கி, மீனவர் நலனில் தனிக்கவனம் செலுத்தியது கழக அரசு!

**தேங்காய்பட்டினத்திற்கு 116 கோடி!**

2022-2023 ஆம் நிதியாண்டில் தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் அலை தடுப்பு சுவரை நீட்டிக்க 116 கோடி ரூபாய் ஒதுக்கியது நம் தலைவரின் கழக அரசு. விபத்து இல்லாத தேங்காய்பட்டினம் துறைமுக மாக உருவாக கழக அரசு, மீனவர் நலனில் அக்கறையுடன் ஒதுக்கிய தொகை 116 கோடி ரூபாய் என்பது இதற்கு முன்பு யாரும் ஒதுக்காத பெருந்தொகை!

**2023-2024 ஆம் நிதியாண்டு**

கடல் சீற்றமும், கடல் அரிப்பும் பெரும் பிரச்னையாக இருப்பதாக மீனவர்கள் கோரிக்கை விடுத்ததும், கடந்த 2023-2024 ஆம் நிதி யாண்டில் கீழ்கடியப்பட்டினம் மீனவ கிராமத்திற்கு கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்ட 35 கோடி ரூபாய் ஒதுக்கியது கழக அரசு! இதேபோல் இரையுமன் துறையில் மீன் இறங்குதளம் அமைக்க 33 கோடியே 75 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

குளச்சல் மீன்பிடித் துறைமுக மானது 2023-2024 ஆம் நிதியாண்டில் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு தூர்வாரி ஆழப்படுத்தப்பட்டது. இதெல்லாம் கழக அரசு மீனவர் நலனுக்காக, மீனவ கிராமங்களின் பாதுகாப்பிற்காக வாரி வழங்கிய திட்டங்கள். இவை மட்டுமா? இன்னும் இருக்கிறது பட்டியல்!

2024-2025 ஆம் நிதியாண்டில் கன்னியாகுமரி பெரியநாயகி தெருவில் கடலரிப்பைத் தடுக்கும்வகையில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவு நீட்டிக்கப்பட்டது. இதேபோல் பள்ளம்துறை மீனவ கிராமத்தில் 26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு தூண்டில் வளைவு நீட்டிக்கப்பட்டது.



**நடப்பு ஆண்டுக்கான திட்டங்கள்**

நடப்பு 2025-2026 ஆம் நிதி யாண்டிற்கும் திராவிட மாடல் அரசு, மீனவர் நலனுக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்த நிதி ஒதுக்கியுள்ளது. அதில் தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறை முகத்தினை தூர்வார ஒரு கோடியே 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தேங்காய்பட்டினம் துறைமுகத்தில் சேதமடைந்த பிரதான அலைதடுப்பு சுவரை சீரமைக்க 37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது மீனவர் நலன் நாடும் திராவிட மாடல் அரசு! இதேபோல் இப்போதைய 2025-26 ஆம் நிதியாண்டில் இரையுமன்துறை மீனவ கிராமத்தில் உள் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலக்கடியபட்டினம் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது கழக அரசு. அன்னை நகர் மீனவர் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க 20 கோடி ரூபாயும், ஆரோக்கியபுரம் மீனவ கிராமத்தில், கிராமத்தின் உள் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒரு கோடியே 40 லட்சம் ரூபாயும் ஒதுக்கியது கழக அரசு!

இவைமட்டுமல்லாது, அழிக்கால், இனயம் புத்தன் துறை, மண்டைக்காடுபுதூர், இனயம், சின்னத்துறை, எழுதேசம் சின்னத்துறை, கொட்டில்பாடு ஆகிய மீனவ கிராமங்களில் கடலரிப்பு தடுப்புச் சுவர் ஏற்படுத்தவும், உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நான்கரை ஆண்டுகளில் மீனவர் சமூகத்திற்கு நாடு போற்றும் திட்டங்களை தந்திருக்கிறார் நம் முதல்வர் அவர்கள்!

**4 ஆண்டுகளில் 567 கோடி ரூபாய்!**

நமது திராவிட மாடல் அரசு, பொறுப்பேற்ற இந்த நான்கரை ஆண்டுகால ஆட்சியில் குமரி மாவட்ட மீனவ கிராமங்களின் பாதுகாப்பு, கட்டமைப்பிற்காக மட்டும் வழங்கியுள்ள தொகை எவ்வளவு தெரியுமா? 567 கோடி ரூபாய்!

மீனவர் நலனிற்காக கடந்த நான்கரை ஆண்டுகால ஆட்சியில் இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கி, எப்போதுமே மீனவர்களின் தோழனாகவே இருக்கிறது கழக அரசு! இவையெல்லாம் அரசு கடற்கரை கிராமங்களின் உள் கட்டமைப்பிற்காக மேற்கொண்ட திட்டங்கள். இதேபோல் தனி நபர் பயன்பாட்டுத் திட்டங்களுக்கும் கழக அரசு ஏராளமான விசயங்களை செய்துள்ளது.

**கடல் மீனவர் சேமிப்பு திட்டம்**

குமரி மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சியில், கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணம் வழங்கும் திட்டத்தில் 29,829 மீனவர்க ளுக்கு, 14 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் கடல் மீனவ மகளிருக்கான தமிழ்நாடு சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் 31,198 மீனவ மகளிர்க்கு 13 கோடியே 97 லட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**மீன்பிடித் தடைக்கால நிவாரணம் உயர்வு**

மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 8000 ரூபாயாக உயர்த்தியதுடன், குமரிமாவட்டத்தில் 29 ஆயிரத்து 519 மீனவ குடும்பங்களுக்கு 2024-2025 ஆம் நிதியாண்டில் மட்டும் 21 கோடியே 81 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் 2024-2025 ஆம் நிதியாண்டில் மட்டும் மீன்பிடி குறைந்த கால நிவாரணத் தொகையாக ஒரு மீனவ குடும்பத்திற்கு 6000 ரூபாய் வீதம், 28,598 மீனவ குடும்பங்களுக்கு 17 கோடியே 16 லட்சம் ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் மீன்பிடித் தொழிலின் போது, கடலில் மாயமான மீனவர்களுக்கு அவசரகால நிவாரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**கனிவுடன் பரிசீலிக்கும் முதல்வர்!**

குமரிமாவட்டத்தில் 2024-2025 ஆம் நிதியாண்டில் மட்டும், 275 பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு வெளி பொருந்தும் இயந்திரத்தை மானியமாக கழக அரசு வழங்கியது! மாண்புமிகு முதல்வர் அவர்கள் குமரி மீனவர்களின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து செயல்படுத்துகிறார்.

குமரிமாவட்டத்தில் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் வழங்கும் திட்டத்தின் கீழ், 664 மீன்பிடி படகுகள் பயன்பெற்று வருகின்றன. நாட்டுப்படகு மீனவர்களுக்காக மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டத்தின் கீழ் குமரிமாவட்டத்தில் பயன்பெற்றுவரும் மீனவர்களின் எண்ணிக்கை மட்டும் 4412.

இதேபோல் கழக அரசு, மேலும் சில முக்கியத் திட்டங்களை குமரி மாவட்டத்திற்கென செயல்படுத்த உள்ளது.

அதில், வாணியக்குடியில் புதிய துறைமுகம் அமைக்க திட்ட மதிப்பீடு செய்ய நான்கரை கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது.

3 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளச்சல் துறைமுகம் விரிவாக்கம் தொடர்பாக திட்ட மதிப்பீடு செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேங்காய்ப்பட்டினம் அணுகுமுறைப் பாதை அமைக்க திட்ட மதீப்பீடு செய்ய 33 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீனவரின் நலனிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது திமுக அரசு. முந்தைய அதிமுக ஆட்சி காலத்தில் ஏற்பட்ட ஒக்கி புயல் நம்முள் ஏற்படுத்திய சோகத்தை யாரும் மறக்க முடியாது. அதில் விலைமதிப்பற்ற நம் மீனவ சொந்தங்களை இழந்தோம்.

திராவிட மாடல் அரசானது, மீனவர்கள் நலனில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு கடல் காலநிலைகுறித்து தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்கும்வகையில், 364 விசைப்படகுகளுக்கு செயற்கைக்கோள் அலைபேசி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 250 ஆழ்கடல் மீனவர்களுக்கு செயற்கைகோள் அலைபேசி வழங்கும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

**மீனவர் நலன் காக்கும் முதல்வர்.**

மீனவர்களின் கடல் தொழிலில் சவால்கள் அதிகம். பேரிடர் நேரங்களில் அவர்கள் சந்திக்கும் சிக்கல்களை வார்த்தையால் விவரிக்கவே முடியாது. இதற்காக திராவிட மாடல் அரசு, மீனவர்களுக்கு குழு விபத்து காப்பீட்டுத் திட்டத்தில் சேர விழிப்புணர் வூட்டியது. அதன்படி, திமுக அரசின் தொடர் முயற்சியால் இதுவரை 88 ஆயிரத்து 71 மீனவர்கள் மற்றும் மீனவ பெண்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். உயிரிழந்த 31 மீனவ குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிவாரணத்தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

ஒருபக்கம் கடற்கரை கிராமங்களின் உள் கட்டமைப்பு, கடல் சீற்றம் போன்ற பெரும் ஆபத்தில் இருந்து காப்பது, மற்றொரு புறத்தில் மீனவர்களை பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக உயர்த்துவது இரண்டிலும் தனிக்கவனம் செலுத்துகிறது நம் திராவிட மாடல் அரசு!

75 ஆண்டுகால பாரம்பர்யம்கொண்ட பவளவிழா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மீனவர் அணி செயலாளர் என்னும் முறையிலும், தலைவரால் மீனவர் நியமிக்கப் பட்ட மீனவர் நலவாரியத்தின் தலைவர் என்னும் முறையிலும் கழக அரசு, குமரிமீனவர்களுக்கு செய்த சாதனைகளை குமரியிலும், தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களில் அந்த, அந்த மாவட்டத்திற்கு செய்திருக்கும் சாதனைகளையும் கழக மீனவர் அணி சார்பில் பரப்புரை செய்ய சூளுரைப்போம்!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக சத்திரஜாரி நில வகைப்பாட்டில் குடியிருந்தவர்கள் குடியிருப்போர் நல சங்கம் சார்பில் பட்டா கோரி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் சந்தித்து மனு அளித்தனர். இப்பட்டா குறித்து சட்டசபையில் பேசி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை அளித்ததை தொடர்ந்து தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆவடியில் பட்டா வழங்கியதை தொடர்ந்து விடுப்பட்ட 35 நபர்களுக்கு வீட்டு மனை பட்டாக்களை டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மு.மணிபாலன், இரா.அறிவழகன், எஸ்.ரமேஷ், இரா.ரமேஷ், மு.கேசவன், டி.கே.ராஜா, கா.சு.ஜெகதீசன், பா.அனந்தராஜ், எஸ்.பார்த்தசாரதி உள்ளிட்டோர் இருந்தனர்.

# திருப்பூர் வடக்கு மாநகர கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் வேண்டுகோள்!

*திருப்பூர், நவ. 25-*

*திருப்பூர் வடக்கு மாநகர தி.மு.க. பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-*

*திருப்பூர்வடக்குமாநகரக் கழக ஆலோசனைக்கூட்டம் இன்று (25.11.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5:00 மணியளவில்போயம்பாளையம் சரண் மருத்துவமனை அருகில் அமைந்துள்ள திருப்பூர் வடக்கு மாநகர அலுவலகம், மேயர் சிட்டி பாபு அரங்கில் திருப்பூர் வடக்கு மாநகர கழகப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ்ஆகியஎனதுதலைமையிலும், திருப்பூர் வடக்கு மாநகர நிர்வாகி கள், பகுதி கழகச்செயலாளர்கள்முன்னிலையில் நடைபெறவுள்ளது.*

*இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார், வடக்கு சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கோ.வெ.குமணன்ஆகியோர் கலந்துகொண்டுஆலோசனைகளை வழங்க உள்ளனர்.*

*அது சமயம் திருப்பூர் வடக்குமாநகரகழகத்திற்குட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள், பகுதி, கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர பிரதிநிதிகள், மாவட்ட, மாநகரசார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும்சிறப்புஅழைப்பாளர்கள் அனைவரும்தவறாமல்கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

**பொருள் :**

*1. நவம்பர்27அன்று இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் நிகழ்வுகள் குறித்து.*

*2. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு (SIR) பணிகள் குறித்து.*

*3. கழக ஆக்கப் பணிகள் குறித்து.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



சோழிங்கநல்லூர் தொகுதி வார்டு எண் 182 கந்தன்சாவடி மற்றும் கொட்டிவாக்கம் பகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் 2025–2026 ஆம் ஆண்டு கல்வி ஆண்டின் விலையில்லா மிதிவண்டியை சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த்ரமேஷ் வழங்கினார். உடன், பகுதி கழக செய லாளர் மண்டலக் குழு தலைவர் பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன், வட்ட செயலாளர் ம.ஆறுமுகம், வெங்கடேசன், எஸ்.கோவிந்தன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெருப்புமேடு து. முத்து
### நவம்பர் 25 (2015)



**இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**சைதை பகுதியில் வட்ட அவைத்தலைவர், துணைச் செயலாளராக தொடர்ந்து பொறுப்பில் இருந்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், குடிநீர் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 58 நாட்கள் தலைவர் கலைஞர் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**